முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1278

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.03.2023, வியாழக்கிழமை

1. தர்ம சக்கரம் கொண்டு உலகினை
தக்கபடி ஞானவழிக்கு மக்களிடை மாற்றம்
உருவாக்கும் சக்தியாக இயங்குகின்ற
உயர் ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 16 ம் நாள், 30.03.2023, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தில் உலகோர் தொடர்ந்தால் போதும்
3. தரமான ஞானவான்கள் படை உலகமெல்லாம் நிரம்பி
தர்மமும் ஞானமும் தழைத்தோங்கி
இந்த பேருலகில் இயற்கை வளமோடு
மக்களுக்குண்டான பொருளாதார வளமும் பெருகி
4. ஆக்கமுடன் அனைவருக்கும் சமத்துவகுணம் கூடி
அல்லலில்லா மகாசக்தி நிலை உண்டாகி
இனிதே ஆற்றல் பட
அரங்கன் வழி உலகமாற்றம்
5. மாற்றம் செய்து மக்களெல்லாம் மகான்களாக
மாபெரும் தலைவனாம் ஆற்றல்பட
ஆறுமுகன் தலைமை ஏற்று நடத்த
அற்புதமான ஞான ஆட்சியை உலகில் நிறுவி
6. நிறுவியே ஞானசித்தர் காலம் என்கின்ற
நிலைத்தன்மை கொண்ட உயர்காலம் ஆறுமுகஅரங்கனால் உருவாக்கப்பட்டு
இனிதே அகிலமே பாதுகாப்பு அமைதி காணும்
அன்பர்களெல்லாம் அரங்கன் வழி ஞானம் பயில இந்த அற்புதம் நடக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—